**25.02.2026**

**அ.வ.எண். 24/2021**

**வா.சா.1 - திரு. சிவசாமி, த/பெ. ராமசாமி**

**வா.சா.1 முதல் விசாரணை தொடர்ச்சி**

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 25.02.2026 is accordance with the provision of Act X of 3331

| ஆவண எண். | தேதி | ஆவணம் | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 09.06.1956 | செட்டில்மெண்ட் ஆவணம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | 07.04.1969 | கிரய பத்திரம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.3 | 26.04.2016 | பாகப்பிரிவினை பத்திரம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.4 | 04.02.2016 | மோப்பிரிபாளைய கிராம புல எண்.467 B க்கான புலப்படம் | பதிவிறக்க நகல் |
| வா.சா.ஆ.5 | 27.05.2016 | ராமாத்தாளின் இறப்பு சான்றிதழ் | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. |
| வா.சா.ஆ.6 | 18.08.2020 | ராமசாமியின் இறப்பு சான்றிதழ் | பதிவிறக்க நகல் |
| வா.சா.ஆ.7 | 01.01.1955 – 08.02.2026 | வில்லங்க சான்றிதழ் | சான்றிட்ட நகல் |

தாவா படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1. எனது பூர்வீகம் வளையபாளையம். நான் 3ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் 1958 ல் பிறந்தேன். நான் இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சொத்து வேண்டும் என தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்து புல எண்.467/B1 காலையில் உள்ளது. பிரதிவாதிகளின் எதிர் வழக்குரையின்

விவரங்களை நான், வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் கடைசி வாய்தாவில் தெரிந்துகொண்டேன். எதிர் வழக்குரை விவரங்களை தெரிந்துகொண்டேன். எதிர் வழக்குரையுடன் பிரதிவாதி தரப்பு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ள விவரத்தை தெரிந்துகொண்டேன் என்றால் ஆமாம்.

2. வா.சா.ஆ.2 கிரய ஆவணம் செல்லாது என வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும், எனது பிரமாண வாக்குமூலத்தில் மேற்படி ஆவணம் குறித்து எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை. புல எண்.467/B1 என்பது தற்போது புல எண்.467/B1 I ல் உள்ளது என்றால் சரிதான். புல எண்.467/B1 ல் இருந்த சொத்து என் தாத்தா ரங்கப்ப கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்ணில் ஏக்கர் 1.58 செண்ட் என் தாத்தாவிற்கு பாத்தியம் ஆகும். என் தாத்தாவிற்கு, என் அப்பா ராமசாமி மற்றும் என் சித்தப்பா மாரப்ப கவுண்டர் வாரிசுகள் என்றால் சரிதான்.

3. என் தாத்தா உயிருடன் இருந்த காலத்தில் சொத்துக்களை வாய்மொழியாக பாகம் பிரித்து கொண்டனர் என்றால் ஆமாம். வா.சா.ஆ.2 கிரய பத்திரம் ஏற்பட்டபோது, என் தகப்பனாருக்கு நானும், செல்வராஜ், சோமசுந்தரம், பாலசுப்பிரமணியம் ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். நானும், என் தகப்பனார் ராமசாமி கவுண்டர், என் தாத்தா ரங்கப்ப கவுண்டர், செல்வராஜ், சோமசுந்தரம், பாலசுப்பிரமணியம் ஆகியோர்கள் சேர்ந்து வா.சா.ஆ.2 கிரய பத்திரம் ஏற்படுத்தி கொடுத்தோம் என்றால் எனக்கு தெரியாது. எனக்கு அப்போது அறியாத வயது. 1969 ல் எனக்கு என்ன வயது என்றால் தெரியாது. எனக்கு மேற்படி கிரய பத்திரம் குறித்து தெரியும் என்றும், நான் தெரியாது என பொய்யாக சொல்கிறேன் என்றால் எனக்கு 2020 ம் ஆண்டு தான் எனக்கு தெரியவந்தது.

4. வா.சா.ஆ.2 கிரய பத்திரம் போதிய மறுபயனான ரூ.1000/- பணம் பெற்றுக்கொண்டு என் தகப்பனாரும், என் தாத்தாவும் அவர்களுக்காகவும், எங்களுக்காகவும் கிரயம் செய்து கொடுத்தனர் என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தை வா.சா.ஆ.2 ஆவணம் மூலமாக பழனிச்சாமி என்பவர் கிரயம் பெற்றார் என்றால் சரிதான். வா.சாஆ.1 செட்டில்மெண்ட் ஆவணத்தில் க.ச.எண்.461/B1

காலையில் 1/18 பாகத்தை தான் செட்டில்மெண்ட் எழுதி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மொத்த விஸ்தீரணம் ஏக்கர் 9.48 சென்ட் ஆகும். அதில் 1/18 பாகத்தை தான் செட்டில்மெண்ட் எழுதி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஏக்கர் 9.48 சென்ட்டில், 1/18 பாகம் என்பது 52 சென்ட் என்றும், மேற்படி 52 சென்ட்டை தான் வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் எழுதி வைக்கப்பட்டுள்ளது என்றால் தவறு.

5. வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணத்தை எந்த சூழ்நிலையில் என் தகப்பனார் என் தாயாருக்கு எழுதி வைத்தார் என்று நேரடியாக தெரியாது என்றால் சரிதான். என் அப்பா, என் அம்மாவிற்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துவிட்டு 2 ம் திருமணம் செய்து கொண்டார். அவர் இறக்கும்வரை என் தாயாருடன் இல்லை. வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணத்தின் படி சொத்து அமலுக்கு வரவில்லை என்றால் என் அம்மா தான் அனுபவத்தில் இருந்தார். என் தாயார் அனுபவத்தில் உள்ளார் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணம் இல்லை, என் அம்மா தான் இறக்குவரை சொத்தில் இருந்தார்.

6. என் தாயாரின் அனுபவத்தில் சொத்து இருந்தது இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணத்திற்கு பின்னிட்டு, என் அம்மாவும், என் அப்பாவும் சேர்ந்து வசித்து வந்தனர் என்றால் இல்லை. என்னுடன் பிறந்த சகோதரி உள்ளார், அவர் எப்போது பிறந்தார் என்றால் தெரியாது. வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ள சொத்துக்களை தவிர இதர சொத்துக்களும் வளையபாளையம் கிராமத்தில் எனக்கு உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணத்தின் அசல் என்னிடம் உள்ளது என்றால் என் தகப்பனார் அதை எங்கோ வைத்துவிட்டார், தற்போது வரை அது கிடைக்கவில்லை. வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணம் என்னிடம் உள்ளது என்றும், அது அமலுக்கு வராததால் தான் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

7. வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்பட்ட போது, என் தாத்தா ரங்கப்ப கவுண்டருக்கும் வழக்குசொத்தில் பங்கிருந்தது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் பத்திரம் 1956 ல் எழுதப்பட்டது என்றும், என் தாயார்

2014 ம் ஆண்டு இறந்தார் என்றும், அது வரை என் அம்மா, அப்பா மற்றும் குழந்தைகள் நாங்கள் ஒன்றாக வசித்து வந்தோம் என்றால் இல்லை. என் தகப்பனார் திருமணம் முடிந்து வெளியே இருந்தார். எங்களுக்குள் போக்குவரத்து இருந்தது என்றால் என் தகப்பனார் எப்போதாவது வருவார். என் தகப்பனார் வந்து போய்க்கொண்டிருந்தார் என்றும், எனவே என் தாயாருக்கு ஜீவனாம்சம் என்பது ஏற்படாது என்றும், அதனால் வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணம் அமல்படுத்தவில்லை என்றால் சரியல்ல.எப்போதாவது குழந்தைகளை பார்க்க வருவார். விவாகரத்து ஏற்படவில்லை.

8. என் தாயார் வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ள சொத்தில் எப்போதும் சுவாதீனத்தில் இல்லை என்றும் அவர் அனுபவத்தில் இல்லை என்று சொன்னால் இந்த சொத்துக்களை மட்டுமல்லாமல் மற்ற சொத்துக்களையும் என் தாயார் அனுபவம் செய்து வந்தார். மேற்கண்டவாறு அனுபவம் செய்து வந்ததற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கு சம்மந்தமான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். வருவாய் ஆவணங்கள் எதுவும் இல்லை. என் தாயாரின் வாரிசு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

9. என் தகப்பனாரின் வாரிசு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் பெற்றோருக்கு நான் மட்டுமே வாரிசு என்றும், சொத்தை அனுபவம் செய்து வருவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணத்தில், க.ச.எண்.475 காலை உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 16.12.2004 தேதியிட்ட கிரய ஆவணம் மூலமாக, நானும், என் தாத்தாவின் அப்பா மாரப்ப கவுண்டர் வகையறாக்கள் மொத்தம் 41 நபர்கள் சேர்ந்து ஒரு கிருஷ்ணன் த/பெ.தர்மலிங்கம் என்பவருக்கு க.ச.எண்.475 ம் நம்பர் காலையில் உள்ள பூமிகளை விற்றோம் என்றால் சரிதான். **16.12.2004 தேதியிட்ட கிருஷ்ணன் பெயரில் உள்ள கிரய பத்திரம் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10. மேற்படி ஆவணத்தில் 19 ம் நபர் என்னுடைய தகப்பனார் ராமசாமி கவுண்டர் ஆவார். 21 ம் நபர் என்னுடைய தாயார் ராமாத்தாள் ஆவார். என்னுடைய தகப்பனாரின் 2 ம் மனைவி புஷ்பவதி 22 ம் நபர் என்றால் சரிதான். என்னுடைய

சகோதரி சாந்தாமணி 23 ம் நபர் மற்றும் நான் அதில் 24 ம் நபர் என்றால் சரிதான். என்னுடைய மகன்கள் முரளிதரன் மற்றும் சந்தோஷ்குமார் 25 மற்றும் 26 ம் நபர்கள் என்றால் சரிதான். பூவாத்தாள் (எ) புஷ்பவதியின் மகன்கள் செல்வராஜ் மற்றும் சோமசுந்தரம் 27 மற்றும் 28 ம் நபர்கள் என்றால் சரிதான். என் தகப்பனாரின் 3 ம் மனைவி சரஸ்வதி, அவரது மக்கள் பாலசுப்பிரமணியம், திருமூர்த்தி, மகள் பேபி ஆகியோர் 29 முதல் 31 நபர்கள் என்றால் சரிதான். இந்த வழக்கிற்கும் மேற்படி ஆவணத்திற்கும் சம்மந்தமில்லை. மேற்படி ஆவணத்தில் தடம் சம்மந்தமாக எழுதப்பட்டுள்ளது.

11. பி.சா.ஆ.1 ஆவணத்தில் "09.06.1956 தேதிய ஆவண எண்.810/1956 ஜுவனாம்ச செட்டில்மெண்ட் பத்திரத்தின் பிரகாரம் அதில் கண்டுள்ள சரத்துக்களின் படி சொத்துக்களை எந்தவிதமான வில்லங்க விவகாரங்களுக்கு உட்படுத்தாமல் அனுபவித்து கொள்ளும் பாத்தியதை உள்ளதும், அவருடைய ஜுவ திசைக்கு பின் மேற்படி 19 ம் இலக்கமிட்ட ராமசாமி கவுண்டருக்கும், அவருடைய சட்டப்படியான வாரிசுகளான சாந்தாமணி, சிவசாமி ஆகியோருக்கு சேரத்தக்க பூமியையும் சேர்த்து மேற்படியாருக்கு அனைவருடைய சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருந்து வந்தது" என கண்டுள்ளது என்றால் சரிதான்.

12. பி.சா.ஆ.1 ஆவணத்தின் படி, வா.சா.ஆ.1 ஜுவனாம்ச செட்டில்மெண்ட் பத்திரத்தில் கண்ட சொத்துக்களை நாங்கள் தான் அனுபவம் செய்து வந்து அதை விற்றோம் என்றும், என் தாயார் மேற்படி சொத்துக்களை அனுபவம் செய்யவில்லை என்றும், அவர் என்றும் சுவாதீனத்தில் இல்லை என்றால் என் அம்மா தோட்டத்து சாளையில் தான் வசித்து வந்தார். என் தாத்தா இறந்த பின்னிட்டு என்னுடைய அத்தைகளிடம், என் தகப்பனார் விடுதலை பத்திரம் வாங்கியுள்ளார். என் அம்மா தோட்டத்து சாளையில் தான் வசித்து வந்தார் என்பதற்கு எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் தகப்பனார், என் அத்தைகளிடம் விடுதலை வாங்கியதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

13. என் தகப்பனார் மது பழக்கம் உடையவர் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆவணம் எதுவும் இல்லை. பக்கத்தில் உள்ளவர்களுக்கு தெரியும். பக்கத்தில் உள்ளவர்களை நான் விசாரிக்கிறேனா என்றால் இல்லை. என் அப்பாவிற்கு சொத்து பாத்தியம் இல்லை என்றும், என் தாயாருக்கு தான் சொத்து பாத்தியம் என்பதற்கு ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. என் அப்பா எதற்காக என் அத்தைகளிடம் விடுதலை வாங்கினார் என்றால் அது தாத்தாவின் சொத்து ஆகும். சொத்து என் தாயார் வசம் இல்லை என்றும், அதனால் தான் என் தகப்பனார் அத்தைகளிடம் விடுதலை வாங்கினார் என்றால் சரியல்ல.

14. வா.சா.ஆ.2 கிரய ஆவணம் ஏற்பட்ட போது எனக்கு 11 வயது என்றால் சரிதான். நான் மேஜரான பின்னிட்டு, மேற்படி கிரய பத்திரம் செல்லாது என்று நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் எனக்கு மேற்படி ஆவணம் பற்றி தெரியாது. என் அம்மாவிற்கு எழுதி வைத்த விவரம் தான் தெரியும். வா.சா.ஆ.2 கிரய பத்திரத்தில், எங்களுக்கு பிதுர்ராஜ்ஜித வகையில் பாத்தியப்பட்டு எங்கள் அனுபவ சுவாதீனத்தில் இருக்கிற இதன் அடியில் கண்ட பூமியை ரூ.1000/- கிரயம் செய்து கொடுப்பதாக கண்டுள்ளது என்றால் சரிதான் .வா.சா.ஆ.2 கிரய பத்திரத்தில் சொத்தின் சுவாதீனத்தை பழனிச்சாமிக்கு கொடுத்தாக கண்டுள்ளது என்றால் சரிதான்.

15. வா.சா.ஆ.2 ஆவணத்தில், செக்குபந்தி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். செக்குபந்தி குறிப்பிடாததால், ஏக்கர் 9.48 சென்ட் விஸ்தீரணத்தில் 93 ½ சென்ட்டை குறிப்பாக அறுதியிட்டு சொல்ல முடியாது என்றால் சொல்லலாம். மேற்படி 93 ½ சென்ட்டிற்கு நான்கு எல்லை குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 93 ½ சென்ட் பூமியானது 2 ம் பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் 2 ம் பிரதிவாதி அனுபவம் செய்வதாக சொல்லவில்லை, அவர் அனுபவம் செய்வதற்கான ஆவணம் வில்லங்க சான்றிதழில் உள்ளது.

16. பழனிச்சாமியின் உடன்பிறந்தவர்கள் ஆறுமுகம் மற்றும் வேலுச்சாமி ஆவார்கள். ஆறுமுகம் இறந்துவிட்டார் என்றும், அவரது வாரிசுகள் 1 முதல் 4 பிரதிவாதிகள் என்றால் சரிதான். மேற்படி பழனிச்சாமி உயிருடன் உள்ளார். மேற்படி பழனிச்சாமியின் கிரய ஆவணம் செல்லாது என சொல்லியுள்ள நிலையில், பழனிச்சாமியை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். பழனிச்சாமியின் சகோதரர் வேலுச்சாமி இறந்துவிட்டார். வேலுச்சாமியின் வாரிசுகளை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். பழனிச்சாமியை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காமல் வா.சா.ஆ.2 கிரய பத்திரம் செல்லாது என பரிகாரம் கோர முடியாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 கிரய ஆவணத்திற்கு பின்னிட்டு பழனிச்சாமி சொத்தை அனுபவம் செய்து வந்தார் என்றால் எனக்கு தெரியாது.

17. க.ச.எண்.467/B1 காலையில் ஏக்கர் 9.48 சென்ட்டில், ஏக்கர் 4.09 ½ சென்ட் சொத்தை வேறு வேறு நபர்களிடம் இருந்து மேற்படி பழனிச்சாமியின் சகோதரர்களான ஆறுமுகம் மற்றும் வேலுச்சாமி ஆகியோர் கிரயம் பெற்று அனுபவம் செய்து வந்தனர் என்றால் இருக்கலாம். ஏக்கர் 4.09 ½ சென்ட்டும், 93 ½ சென்ட் சேர்த்து மொத்தம் ஏக்கர் 5.03 சென்ட் சொத்தை பழனிச்சாமி, ஆறுமுகம், வேலுச்சாமி ஆகியோர் கூட்டாக அனுபவம் செய்து வந்தனர் என்றால் தெரியாது. ஏக்கர் 5.03 சென்ட்டை மேற்படி நபர்கள் 02.12.1978 தேதியிட்ட ஆவணம் மூலம் பாகம் பிரித்து கொண்டனர் என்றால் தெரியாது. வா.சா.ஆ.3 ஆவணத்திற்கு மூல ஆவணமாக 02.12.1978 தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணம் குறித்து நான் பரிகாரம் எதுவும் கோரவில்லை என்றால் எனக்கு நினைவில்லை. வா.சா.ஆ.2 கிரய ஆவணம் பெயரளவில் உள்ள ஆவணம் என சொல்வது தவறு என்றால் சரியல்ல.

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

வேண்டுகோளின் படி ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct
Sd./M.Santhosham
District Munsif, Sulur